1987 ஏப்ரல் 24]

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,76,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு

திருவாளர்கள் கே. கல்லன், கே. சுப்பராயன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,07,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25–4–1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

80. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளின் படிவம் 1-ல் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 24–12–1986 ஆம் நாளிட்ட 1260 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்டஅறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. 1985–86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

179. தொழில் கொள்கையும், திட்டங்களும் (பெருந் தொழில்கள்), 1987–88 (தமிழ், ஆங்கிலம்).

180. மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1987–88 (தமிழ், ஆங்கிலம்).

181. தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1987–88, (தமிழ், ஆங்கிலம்).

182. சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம், 1987–88 (தமிழ், ஆங்கிலம்).

183. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 1987–88 (தமிழ், ஆங்கிலம்).

184. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண் 1 முதல் 50 வரை).